JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness
for Prosecution

| CC.No. | 13/2025 | Crime No. | 640/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW1- மணிகண்டன்** | Village | |
| Father’s Name/Husband’s Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 07th day of April 2026. | | | |

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர் இல்லை.**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு, வெல்டிங் ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் சிபி ஹரிஷ் மற்றும் கோகுல் ஸ்ரீ ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் முதலில் எனது நண்பர்களாக இருந்தவர்கள். நான் குதிரை பந்தயத்தில் கலந்து கொண்டு அதில் வெற்றி பெறுவதால் என் மீது எதிரிகளுக்கு பொறாமை ஏற்பட்டது. அதில் எங்களுக்குள் சண்டை வந்தது. அதனால் நான் அவர்களிடம் இருந்து பிரிந்து விட்டேன். இந்நிலையில் தேதி, மாதம், நினைவில்லை, 1 –1/2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தீபாவளி என்று அதிகாலை சுமார் 01.00 மணியளவில் நான் எனது வேலையை முடித்துவிட்டு காமராஜ் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த எதிரிகள் என்னை பார்த்து எப்போதும் நீ ஜெயித்துக் கொண்டிருக்கிறாய் என்று கூறி என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். பின்னர் எதிரி சிபி அவரது கையால் எனது வலது கண்ணுக்கு கீழ் அடித்தார். அப்போது அங்கு வந்த சக்திவேல் என்பவர் எதற்காக அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி கோகுல் சக்திவேலை பார்த்து நீ என்னடா கேட்கிறாய் என்று கூறி அவரது அல்லையில் அடித்து விட்டார். பின்னர் அங்கு வந்த சக்திவேலின் அக்கா சந்தியா சக்திவேலை அங்கிருந்து அழைத்துச் சென்று விட்டார். பின்னர் எதிரிகள் கோகுல் ஸ்ரீ மற்றும் சிபி ஹரிஷ் ஆகியோர்கள் என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். பின்னர் சக்திவேலின் அண்ணன் ரமேஷ் என்பவர் என்னை சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்று சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார்**

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.04.07 16:03:28 +0530

**வாக்கு மூலம் அ.சா.ஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச.317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.07 16:03:37 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani